ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 326) Aug (2) / 2020



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ........................................................................................3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ..............................................................5

3. தத்வ த்ரயம்...........................................................................................7

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..................................................13

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..........................18

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 146)

21. லோம மாம்ஸ அஸ்தி மஜ்ஜாஸ்ருக் பஞ்சஹோதா ஸுரேச்வர
ஸ்தநாவண்டௌ ச பும்ஸ்த்வம் ச ஷட்டோதாபாந ஏவ ச

**பொருள்** – அந்தப் புருஷனுடைய முடி, சதை, எலும்புகள், மஜ்ஜை, இரத்தம் ஆகியவை "பஞ்சஹோத்ரி" என்னும் மந்த்ரத்தால் ஆனவை ஆகும். அவனுடைய மார்பகம், விந்தகம், ஆண்மை, பின்பாகம் ஆகியவை "ஷட்ஹோத்ரி" என்னும் மந்த்ரத்தால் ஆனவை ஆகும்.

22. சீர்ஷண்யா: ஸப்த யே ப்ராணா: ஸப்தஹோதா நிகத்யதே
சோபாஸ்து தக்ஷிணாஸ்தஸ்ய ஸம்பாரா: ஸந்தய: ஸ்ம்ருதா:

**பொருள்** – அவனுடைய தலையில் உள்ள ஐந்து ப்ராணன்கள், "ஸப்தஹோத்ரி" என்னும் மந்த்ரத்தால் ஆனவை ஆகும். தக்ஷிணை என்பது அவனுடைய சோபை ஆகும். ஸம்பாரம் என்பது அவனுடைய முஷ்டி இணைப்புகள் ஆகும்.

23. நாடயோ தேவபத்ந்ய: அஸ்ய ஹோத்ருணாம் ஹ்ருதயம் மந:
சேதந: பௌருஷம் ஸூக்தம் சக்தி: ஸ்ரீஸூக்தம் உச்யதே

**பொருள்** – "தேவபத்ந்யம்" என்னும் மந்த்ரமானது அவனுடைய தமனிகள் ஆகும். "ஹோத்ருணாம் ஹ்ருதயம்" என்னும் மந்த்ரமானது அவனுடைய மனம் ஆகும்.

புருஷஸூக்தம் அவனுடைய ஞானம் ஆகும், ஸ்ரீஸூக்தம் அவனுடைய சக்தி ஆகும்.

24. ஓங்கார: ப்ரணவஸ்தாரோ க்ருஹ்யம் நாம ஸநாதநம்
 யஜூம்ஷி ருத்ரசுக்ராணி ஸ்தூலநாமாநி தஸ்ய து

**பொருள்** – எப்போதும் உள்ளதான அவனுடைய மறைவான பெயர்களாக "ஓங்காரம், ப்ரணவம், தாரா" ஆகியவை உள்ளன. அவனுடைய ஸ்தூலமான பெயர்களாக "யஜுஸ், ருத்ரம், சுக்ரம்" ஆகியவை உள்ளன.

25. யஜுர்மயமநும் திவ்யமப்யஸ்யந் புருஷம் நர:
 அநுவ்யாஹ்ருத்யபீசார பாபேப்ய: அபி ப்ரமுச்யதே

**பொருள்** – யார் ஒருவன் வ்யாஹ்ருதி மந்த்ரத்தை உச்சரித்த பின்னர், இந்த திவ்யமான புருஷ மந்த்ரம் மற்றும் யஜுர்மய மந்த்ரத்தை உச்சரித்தபடி உள்ளானோ அவன், தாழ்ந்த பலன்களுக்காக மந்த்ரங்களை பயன்படுத்துவதால் உண்டாகும் பாபங்களை அடைவதில்லை.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 13)

[ஸூத்ரதாரன் நடியிடம்] அச்சம் கொள்ளவேண்டாம். நம்மிடம் பாக்கியம் உள்ளது.

21. லக்ஷணஸம்ருத்திரநகா ரஸபரிபோஷச்ச ஸஹ்ருதய க்ராஹ்ய:
ஸம்பததி நாடகே அஸ்மிந் ஸ ஏஷ சைலூஷஸூக்ருத பரிபாக:

**பொருள்** – (ஸூத்ரதாரன் கூறுவது) இந்த நாடகத்தில் அனைத்துவிதமான நாடக இலக்கணமும் நன்றாகவே உள்ளன. சிறந்த மனம் கொண்டவர்கள் நன்கு அனுபவிக்கும்படியாக இதி ரஸம் நிறைந்துள்ளது. இது நாடகத்தில் நடிப்பவர்களுடைய பாக்கியம் ஆகும்.

மேலும்,

22. வித்யாஸம்பந்நிதிரவஹிதோ வேங்கடேச: கவீந்த்ர:
ஸித்தாரம்பச்சிரமபிநயே மாமக: ஷாத்ரவர்க:
ப்ரக்யாதேயம் பரிஷதநகா பக்ஷபாதாநபிஜ்ஞ
ராமாதீநாம் குலதநமிதம் ரங்கதா யாதி ரங்கம்

**பொருள்** – (ஸூத்ரதாரன் கூறுவது) வித்யை என்னும் செல்வத்திற்கு நிதியாக, கவிகளின் அரசரான வேங்கடேசர் மிகவும் கவனமாகவே உள்ளார். இங்குள்ள எனது நாடகக் கலைஞர்களும் நீண்டகாலமாக இந்த நாடகக்கலையில் தாங்கள் உள்ளதை பலவிதங்களும் நிரூபிக்கிறார்கள். இங்கு கூடியுள்ள அனைவரும் பாரபக்ஷம் காணாதவர்களாகவும், தோஷங்கள் அற்றவர்களாகவும் உள்ளனர்.

ஸ்ரீஇராமன் முதலானவர்களுடைய குலதனமாக உள்ள ஸ்ரீரங்கவிமானம் உள்ள இடமே இந்த நாடக அரங்கமாக உள்ளது.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 22)

47. அசித்துக் கழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்.

**அவதாரிகை** - இப்படி ஆத்மாவுக்கு வந்தேறியான அவித்யாதிகள் தான் எவ்வவஸ்தையிலே கழிவது? என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார் (அசித்துக் கழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்) என்று.

**விளக்கம்** – இவ்விதம் ஆத்மாவிற்கு வந்து சேர்ந்ததான அவித்யை போன்றவை எந்த நிலையில் விலகுகின்றன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அதாவது காரணநிவ்ருத்தயா கார்ய நிவ்ருத்தியாகையாலே, அசித் ஸம்பந்த நிபந்தநமாக வந்த இவையும் தத் ஸம்பந்தம் கழிந்தவாறே கழியுமென்று தத்வ வித்துக்கள் சொல்லுவர்களென்றபடி. “என்பர்கள்” என்றவித்தை பரமதமாக்கி, மயர்வற மதிநலமருளப் பெற்றவர்களுக்கு பகவத் ப்ரஸாத விசேஷத்தாலே அசித்துக் கழியும் முன்னே அவித்யாதிகள் கழியக் காண்கையாலே அந்த நியமமில்லை என்று இவருக்குக் கருத்து என்று சொல்லுவாருமுண்டு. அது முக்யமன்று; அவர்கள் திருமேனியோடே இருக்கச் செய்தே, பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்ததேயாகிலும் “வினைப்படலம் விள்ள விழித்துன்னை மெய்யுற்றாலுள்ளவுலகளவும் யானுமுளனாவனென்கொலோ” என்கையாலே, “ஸர்வம் ஹ பச்ய: பச்யதி” என்கிற முக்தாவஸ்தையில் வைசத்யம் அசித்து கழிவதற்கு முன்பில்லாமையாலே. ஆக, கீழ்ச் செய்ததாயிற்றது - ஆத்மஸ்வரூபம்

பத்த முக்த நித்ய ரூபேண மூன்றுபடிப்பட்டிருக்குமென்றும், அதில் பத்த சேதநர்க்கு அவித்யாத்யுத்பத்தி மூலமும், தந் நிவ்ருத்திக்ரமமும் சொல்லி நின்றது.

**விளக்கம்** – அதாவது, "காரணம் விலகும்போது, கார்யமும் விலகும்" என்று கூறுவதற்கு ஏற்ப, அசித் வஸ்துக்களுடைய ஸம்பந்தத்தின் விளைவாக வந்து சேர்ந்த இவை அனைத்தும், அத்தகைய ஸம்பந்தம் நீங்கிய பின்னர் அழிந்துவிடும் என்று, உண்மையை அறிந்தவர்கள் கூறுவர். சூர்ணையில் உள்ள "என்பர்கள்" என்பதை, மற்றவர்கள் கூறும் கருத்தாக எடுத்துக்கொண்டு, "மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்க்கு, பகவத் க்ருபையின் சிறப்பு காரணமாக, அசித் வஸ்துக்களுடைய ஸம்பந்தம் நீங்குவதற்கு முன்பாகவே அவித்யை போன்றவை நீங்குவதை நாம் காண்கிறோம். ஆகவே அசித் ஸம்பந்தம் நீங்கவேண்டும் என்ற விதிமுறை அனைவருக்கும் பொருந்தாது" என்று உரைப்பதே இவருடைய கருத்து என்று சிலர் கூறுவர். ஆனால் அது முக்கியம் அல்ல; ஆழ்வார்கள் தாங்கள் ஆதரித்த திருமேனியுடன் இருக்கும் நிலையில் கூட பரமபக்தி வரை நீண்ட ஞானம் ஏற்பட்டபோதிலும், பெரியதிருவந்தாதி (76) – வினைப்படலம் விள்ள விழித்துன்னை மெய்யுற்றாலுள்ளவுலகளவும் யானுமுளனாவனென்கொலோ - என்று கூறுவதால், சாந்தோக்யம் - ஸர்வம் ஹ பச்ய: பச்யதி – ப்ரஹ்மத்தைக் கண்டவன் அனைத்தையும் கண்டவன் ஆகிறான் - என்று முக்தி பெற்ற நிலையில் ஏற்படும் ஞானத்தெளிவானது, அசித் ஸம்பந்தம் நீங்குவதற்கு முன்பு இல்லை என்பதால், இவ்விதம் உரைத்தார் என்று கருத்து. இதுவரை கூறப்பட்டது என்ன? ஆத்மஸ்வரூபமானது "பத்தர், முக்தர், நித்யர்" என்று மூன்றுவகையாக உள்ளது என்பதும், ஸம்ஸாரத்தில் பந்தப்பட்ட சேதநர்களுக்கு அவித்யை உற்பத்தி ஆவதன் அடிப்படையும் அவற்றின் விலகுதலும் கூறப்பட்டது.

48. இம்மூன்றும் தனித்தனியே அநந்தமாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி உக்தமான த்ரிவிதாத்ம வர்க்கமும், இத்தனை சேதநரென்று ஸங்க்யேயமாயிருக்குமோ? என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார்.

**விளக்கம் –** இவ்விதம் கூறப்பட மூன்றுவிதமான ஆத்மாக்களும் “இத்தனை” என்று அளவிட்டுக் கூறலாம்படி உள்ளதோ என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (இம்மூன்றும் தனித்தனியே அநந்தமாயிருக்கும்) என்று. இம்மூன்றும் அநந்தமாயிருக்குமென்றால், வர்க்கத்ரயமுமாக அநந்தமென்று தோற்றுமென்று நினைத்து, “தனித்தனியே” என்று விசேஷிக்கிறார். அநந்தமாயிருக்குமென்றது அஸங்க்யேயமாயிருக்குமென்றபடி.

**விளக்கம் –** “இந்த மூன்றும் எண்ணற்றதாக உள்ளது” என்று கூறினால், “மூன்று பிரிவும் எண்ணற்றதாக உள்ளன” என்ற கருத்து உண்டாகிவிடும் என எண்ணியவராக, “தனித்தனியே” என்று சிறப்பித்துக் கூறுகிறார். “அந்தந்தமாக” என்றால் “எண்ணற்று” என்று பொருள்.

49. சிலர், ஆத்மபேதமில்லை; ஏகாத்மாவே உள்ளதென்றார்கள்.

**அவதாரிகை -** உக்தமான ஜீவாநந்த்யத்துக்கு விரோதியான ஐகாத்ம்ய வாதத்தை நிராகரிக்கிறார் மேல் (சிலர் ஆத்ம பேதமில்லை, ஏகாத்மாவேயுள்ளதென்றார்கள்) என்று தொடங்கி.

**விளக்கம் –** மேலே கூறப்பட்டதான “ஆத்மாக்கள் எண்ணற்றவை” என்ற வாதத்திற்கு முரண்பட்ட கருத்தான “ஆத்மா ஒன்று மட்டுமே” என்ற வாதத்தை அடுத்து மறுக்கிறார்.

**வ்யாக்யானம் -** சிலரென்று அநாதரோக்தியாலே அருளிச் செய்கிறார். இப்படி சொல்லுமவர்கள் தாங்கள் ஆரோ? என்னில், ஜீவாத்வைத ப்ரதிபாதக சாஸ்த்ரத்தில் குத்ருஷ்டிகள். அதாவது, ப்ரஹ்மாத்வைதமென்றும், ஜீவாத்வைதமென்றும் சாஸ்த்ர ப்ரதிபாத்யமான அத்வைதம் த்விவிதமாயிருக்கும். அதில் ப்ரஹ்மாத்வைதமாவது ப்ரகார்யத்வைதம். ஜீவாத்வைதமாவது ப்ரகாராத்வைதம். இதுக்கு நியாமகமேது? என்னில், ப்ரஹ்ம ப்ரகரணங்களிலே “ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம”, “ஐததாத்ம்யமிதம் ஸர்வம்”, “புருஷ ஏவேதம் ஸர்வம்”

என்று ஸாமாநாதிகரண்யத்தாலே ப்ரஹ்மாத்வைதத்தை ப்ரதிபாதிக்கையாலும், ஸாமாநாதிகரண்யம் ப்ரகார பேத விசிஷ்ட ப்ரகார்யேகத்வ பரமாகையாலும், "ஏகஸ்ஸந் பஹுதா விசார" என்று ப்ரகார பஹுத்வம் கண்டோக்தமாகையாலும், ஐக்ய விதிக்கு சேஷமான "நேஹநாநாஸ்தி" இத்யாதி பேத நிஷேதம் விஹிதைக்ய விரோதி பேத விஷயமாகையாலும், ஸாமான்ய நிஷேதம் விஹித வ்யதிரிக்த விஷயமாகையாலே ப்ரகாரி பஹுத்வ நிஷேத பரமாகையாலும், "ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" என்று ப்ரஹ்ம துல்ய ப்ரகார்யந்தர நிஷேத கண்டோக்தியாலும் ப்ரகார்யத்வைதமே ப்ரஹ்மாத்வைதம்.

**விளக்கம்** – அவ்விதம் உரைப்பவர்கள் யார் என்று, அவர்கள் குறித்து உரைப்பதற்கும் அவர்கள் தகுதியற்றவர்கள் என்பதால், அவர்களை "சிலர்" என்கிறார். இவ்விதம் கூறுபவர்கள் யார் என்றால், "ஜீவாத்மா - பரமாத்மா" என இரண்டு உள்ளதை வெளிப்படுத்தும் சாஸ்த்ரங்களைத் தவறாக அறிபவர்கள் ஆவார்கள். அதாவது சாஸ்த்ரங்களில் கூறப்படும் அத்வைதமானது, ப்ரஹ்ம அத்வைதம் மற்றும் ஜீவ அத்வைதம் என இரு வகைப்படும். இவற்றில் ப்ரஹ்ம அத்வைதம் என்பது "ப்ரகாரி ஒன்று" என்பதாகும்; ஜீவ அத்வைதம் என்பது "ப்ரகாரம் ஒன்று" என்பதாகும் (ப்ரகாரி என்றால் முதன்மையான வஸ்து, ப்ரகாரம் என்றால் ப்ரகாரிக்கு உடைமையான பொருள் என்பதாகும்). இதற்கான சான்றுகள் என்ன? ப்ரஹ்மத்தைக் குறித்து உரைக்கப்படும் பகுதிகளில், சாந். (3-14-1) - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - இவை அனைத்தும் ப்ரஹ்மம் -– என்றும், சாந். (6-8-7) – ஐதத் ஆத்ம்யமிதம் ஸர்வம் - அனைத்தும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டது - என்றும், ச்வே. (3-15)- புருஷ ஏவேதம் ஸர்வம் – இந்தப் புருஷனே இவை அனைத்தும் - என்றும் உள்ள பல வாக்கியங்களில், ஸாமாநாதிகண்யம் (பல பொருள்கள் கொண்ட சொற்கள், ஒரே வேற்றுமையில் நின்று, ஒரே பொருள் குறித்து உரைக்கும் தன்மை : உதாரணம் - கறுத்த பருத்த யானை – என்பதில் உள்ள கறுத்த மற்றும் பருத்த ஆகிய சொற்களை யானையையே குறிப்பதாக உள்ளன) மூலம், ப்ரஹ்ம அத்வைதம் வெளிப்படுத்தப்படுகிறது; சிறப்புடன் கூடியவை மற்றும் அவ்விதம் அல்லாதவை எனப் பலவற்றையும் ஒன்றாக ஸாமாநாதிகரண்யம் கூறுவதால், ப்ரகாரங்களில் உள்ள வேறுபாட்டுடன் ப்ரகாரி உள்ளது என்று உணர்த்துகிறது; ஏகஸ்ஸந் பஹுதா விசார – பரமாத்மா ஒன்றாக

இருந்தபடி பலவற்றையும் வ்யாபிக்கிறான் – என்று ப்ரகாரத்தின் பலவாக உள்ள நிலை கூறப்பட்டுள்ளது. “ஒன்றே ஆகும்” என்ற ஐக்யத்தை கூறும் விதியின் எஞ்சிய பகுதியானது, ந இஹ நாநாஸ்தி - பரமாத்மாவை விடுத்து ஏதும் இல்லை - என்று வேறுபாட்டைத் தள்ளுகிறது; இப்படியாக வேறுபாட்டைத் தள்ளுகின்ற சாஸ்த்ரங்களில் “அனைத்தும் ஒன்றே” என்று விதிக்கப்பட்ட கருத்தானது விரோதிபேத விஷயமாக உள்ளதாலும், பொதுவாகத் தள்ளப்படும் விதியானது வேறுபட்ட விஷயமாக இருப்பதால் ப்ரகாரியாகிய விஷயம் பலர் என்று தள்ளுவதாக உள்ளதாலும், ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே – பரமாத்மாவிற்கு நிகரானதும் மேலானதும் காணப்படவில்லை – என்று ப்ரஹ்மத்திற்கு நிகரான ப்ரகாரி வேறு இல்லை என்று விதிவாக்கியமான இதில் கூறப்படுவதாலும், “ப்ரகாரியானது ஒன்றே ஆகும்” என்று கூறுவதே ப்ரஹ்ம அத்வைதமாகிறது.

**வ்யாக்யானம்** - ஜீவபஹுத்வம் ச்ருதி ஸித்தமாகையாலும், அல்லாதபோது பத்த முக்த வ்யவஸதாநுபபத்தியாலும் உபதேசாநுபபத்தியாலும் ஸுகாதி வ்யவஸ்தாநுபபத்தியாலும் “புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:, சதுர்விதோ விபேதோயம் மித்தயா ஜ்ஞாந நிபந்தந தேவாதிபேதே அபத்வஸ்தே” இத்யாதிகளாலே தேவாதி சரீர பேத விசேஷ நிஷேதம் கண்டோக்தமாகையாலும், முக்தாத்மாக்களுக்கு ஸாம்யத்தை ச்ருதி சொல்லுகையாலும், ஜீவாத்வைதம் ப்ரகாராத்வைதமே.

**விளக்கம்** – ஜீவாத்மாக்கள் பலர் உள்ளனர் என்பது ச்ருதி மூலம் வெளிப்படுவதாலும், இவ்விதம் கொள்ளவில்லை என்றால் “பத்தர், முக்தர்” என்பது போன்ற நிலைகள் பொருத்தம் இல்லாமல் போகும் என்பதாலும், உபதேசங்கள் அனைத்தும் பொருந்தாமல் போகும் என்பதாலும், இன்பம் முதலான அனுபவங்கள் பொருந்தாது என்பதாலும், ஸ்ரீவிபு. (2-13-98) - புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:, சதுர்விதோ விபேதோயம் மித்தயா ஜ்ஞாந நிபந்தந தேவாதிபேதே அபத்வஸ்தே - ஜீவாத்மா தேவனும் அல்லன், மனிதனும் அல்லன், தாவரம் அல்லன், விலங்கு அல்லன் என்று கூறப்பட்ட நான்குவிதமான வேறுபாடுகள் தவறான ஞானத்தால் ஏற்படுகிறது; தேவன் முதலான வேறுபாடுகள் நீங்கும்போது மெய்யான ஞானம் ஏற்படுகிறது - என்பது போன்று வாக்கியங்கள் மூலம்

தேவர்கள் முதலான சரீர வேறுபாடுகள் அனைத்தும் கண்டிக்கப்பட்டதாலும், முக்தி பெற்ற ஆத்மாக்களுடைய ஸ்வரூபத்தில் ஒற்றுமை கூறப்படுவதாலும், ஜீவ அத்வைதம் என்பது ப்ரகார அத்வைதமே ஆகிறது.

**வ்யாக்யானம்** - இதுதாம் ச்ருதப்ரகாசிகையிலே ஆதிபரத சதுச்ச்லோகீ வ்யாக்யாநோபக்ர மத்திலே "ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதஞ்சேத்யத்வைதம் த்விவிதம் சாஸ்த்ர ப்ரதிபாத்யம்" என்று தொடங்கி, ஸ்ரீவேதவ்யாஸபட்டராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. இப்படி சாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற ஜீவாத்வைதத்துக்கு ஹ்ருதயமறியாதே "ஆத்மபேதமில்லை ஏகாத்மாவே உள்ளதெ"ன்று சில குத்ருஷ்டிகள் சொன்னார்களென்கை.

**விளக்கம்** - இதனை ச்ருதப்ரகாசிகையில் ஸ்ரீவேதவ்யாஸபட்டர் ஆதிபரத சதுச்லோகி வ்யாக்யான தொடக்கத்தில், ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதஞ்சேத்யத்வைதம் த்விவிதம் சாஸ்த்ர ப்ரதிபாத்யம் - ப்ரஹ்ம அத்வைதம் மற்றும் ஜீவ அத்வைதம் என்று இரண்டுவிதமான அத்வைதங்கள் சாஸ்த்ரத்தில் கூறப்பட்டன – என்று உரைக்கத் தொடங்குகிறார். இவ்விதம் சாஸ்த்ரத்தில் கூறப்பட்ட ஜீவ அத்வைதத்தில் கருத்து இன்னது என்று அறியாமல் சாஸ்த்ரத்திற்கு முரணான பொருள் கற்பிக்கும் சிலர், "ஆத்மாக்களில் வேறுபாடு இல்லை. ஒரு ஆத்மா மட்டுமே உள்ளது" என்றனர்.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 291)

4-6-5 இவளைப் பெறும் பரிசு இவ்வணங்காடுதலன்றந்தோ
குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும் பயந்தனள்
கவளக்கடாக் களிறட்ட பிரான் திருநாமத்தால்
தவளப்பொடிக் கொண்டு நீர் இட்டிடுமின் தணியுமே

**பொருள்** - எல்லையற்ற மேன்மை கொண்ட இவளை நாம் மீண்டும் அடையும்விதமானது, இவ்விதம் அணங்கு ஆடுதல் (அதாவது தாழ்ந்த தேவதை தன் மீது வந்ததாக ஆடுதல்) அல்ல. ஐயோ! இவளுடைய இந்த நோய் அதிகமாகவே உள்ளதே! குவளை மலர் போன்று பரந்து விரிந்துள்ள கண்களும், கோவைப்பழம் போன்று சிவந்துள்ள உதடுகளும் தங்களுடைய நிறம் மாறி, பசலை நிறம் அடைந்தாள். இதற்கான பரிகாரம் என்னவென்றால், கவளத்தை உண்பதும், மதம் பொருந்தியதும் ஆகிய குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றவனாகிய க்ருஷ்ணனுடைய திருநாமத்தை உச்சரித்தபடியே, பாகவதர்களுடைய தூய்மையான பாததூளிகளை இவளுக்கு நீங்கள் இடுவீர்களாக. இதன் மூலம் இவளுடைய இந்த நோயானது தணியும்.

**அவதாரிகை** – “நீங்கள் பண்ணுகிற பரிஹாரம் நோயை மிகப் பண்ணா நின்றது; அத்தைவிட்டு, நோய்க்கு போக்யமான பரிஹாரத்தைப் பண்ணுங்கோள்”, என்கிறாள்.

**விளக்கம்** - “நீங்கள் செய்வதான அணங்கு ஆடுதல் முதலான பல பரிகாரங்களும், இவளுடைய நோயை அதிகரிக்கச் செய்கின்றன. ஆகவே அவற்றை விடுத்து, இந்த நோய்க்கு ஏற்றபடியான பரிகாரத்தைச் செய்வீர்களாக”, என்கிறாள்.

**வ்யாக்யானம்** - (இவளைப் பெறும் பரிசு இவ்வணங்காடுதல் அன்று) இந்நற் சரக்கைப் பெறப் பார்ப்பார், இந் நிஷித்தாநுஷ்டாநத்தாலேயோ பெறப் பார்ப்பது? இவ்விலக்ஷணமாயிருக்கிற இவளைப் பெறுகைக்கு உபாயம் இத்தேவதா விஷ்டமாயாடுமதன்று. இவள் இப்படி சொன்னவிடத்திலும் அவர்கள் மீளாதொழிகையாலே, (அந்தோ) ஐயோ! இவளை இழந்தோமாகாதேயென்கிறாள். இது அநுவர்த்திக்குங்காட்டில் இவளையிழக்க வேணுமோ? என்ன, பார்க்கமாட்டிகோளோ? (குவளைத் தடங்கண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள்) அவனுடைய வாய்புகு சோறன்றோ பறியுண்கிறது? “தொண்டையஞ் செங்கனிவாய் நுகர்ந்தானை” என்றும், “மண் நோக்கமுண்டான்” என்றும் இவையிறே அவனுக்கு ஊண். “குவளையங்கண்ணி” என்னக் கடவதிறே; குவளைப் பூப்போலேயாய் போக்தாக்தாக்களளவல்லாத பரப்பையுடைத்தான கண்ணும்; “கோவை வாயாளி”றே, கோவைப்பழம் போன்ற சிவந்த அதரமும் விவர்ணமாயிற்றின; பசந்தனளென்றபடி. பகவத் விரஹத்துக்கும் அகஞ்சுரிப்படாதவை, தேவதாந்தர ஸ்பர்சத்தாலும் ததீய ஸ்பர்சத்தாலுமாக விவர்ணமாயிற்றினவென்றபடி.

**விளக்கம்** - (இவளைப் பெறும் பரிசு இவ்வணங்காடுதல் அன்று) - இப்படிப்பட்ட உயர்ந்த சிறப்புகளைக் கொண்ட இவளை மீண்டும் அடைய எண்ணுபவர்கள், இப்படிப்பட்ட தாழ்ந்த செயல்கள் மூலமோ அடைய முயல்வார்கள்? இவளை மீண்டும் அடைதல் என்பதற்கான உபாயம், இவ்விதம் தாழ்ந்த தெய்வத்தின் ஆவேசம் மூலம் அல்ல. இவள் இவ்விதம் கூறிய பின்னரும் அவர்கள் மாறவில்லை.

இதனைக் கண்ட தோழி மீண்டும் கூறத் தொடங்குகிறாள். (அந்தோ) ஐயோ! இவளை நாம் இழக்கப் போகிறோம். இதனைக் கேட்ட தாய்மார்கள், "இவ்விதம் தெய்வ ஆவேசம் மூலம் இவலை இழத்தல் என்பது நேரிடுமோ?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறாள். நீங்கள் நோக்கவில்லையா? (குவளைத் தடங்கண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள்) - அவனுடைய திருவாய்க்கு ஏற்ற உணவாக உள்ளவை இங்கு பறி போகிறதே! ஆனால் இவளுடைய கண்களும் வாயும் அவனுக்கு உணவாக இருக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார். பெரியதிருமொழி (3-7-2) தொண்டையஞ் செங்கனிவாய் நுகர்ந்தானை - என்னும், பெரியதிருமொழி (8-10-1) - மண் நோக்கமுண்டான் – என்னும் கூறுவதற்கு ஏற்ப இவை அல்லவோ அவனுடைய உணவாக உள்ளன? பெரியதிருமொழி (2-7-1) குவளையங்கண்ணி – என்று கூறுவதற்கு ஏற்ப, குவளைமலர் போன்று, அனுபவிப்பவர்கள் அளவு அல்லாத பரப்பைக் கொண்ட கண்கள். திருவாய்மொழி (4-3-1) – கோவை வாயாள் - என்பதற்கு ஏற்ப, கோவைப்பழம் போன்று சிவந்த வாய்; இவை இரண்டும் பசலை நிறம் அடைந்தன. பகவானைப் பிரிந்து நிற்கும் காரணத்தால் விரஹம் அடைந்தாள். அதற்குக்கூட இவ்விதம் தனது நிறத்தை இழக்காத இவள், மற்ற தேவதைகளுடைய ஸம்பந்தம் மற்றும் அவற்றின் அடியார்களுடைய ஸம்பந்தம் ஆகியவை காரணமாகப் பசலை நிறம் கொண்டாள்.

**வ்யாக்யானம்** - ஆனால், பரிஹாரம் சொல்லாயென்ன; நீங்களேயன்றோ "நெடுங்காலமும் கண்ணன் நீண்மலர்ப்பாதம் பரவிப் பெற்ற" என்று சொன்னிகோள்; அப்படியே க்ருஷ்ணன் த்ருவடிகளை ஆச்ரயித்து அவனாலே பரிஹ்ருதமாக வேணுமென்கிறாள். (கவளம் இத்யாதி) இரண்டு அநீதியுண்டு இங்கே புகுந்தது; அவ்விரண்டுக்கும் இரண்டையுங் கொண்டு பரிஹரிக்கப் பாருங்கோள். கவளங் கொண்டிருப்பதாய், துர்த்ரவ்யங்களைப் பருக்கிப் பிச்சேற்றுவித்து நிறுத்தினார்களாயிற்று. கடாம் என்று மதஜலம். மதஜலமொழுகா நின்றுள்ள குவலயாபீடத்தை முடித்த உபகாரகன். ப்ரபல ப்ரதிபந்தங்களை அநாயாஸேந போக்கவல்லவன் திருநாமத்தாலே பரிஹரிக்கப் பாருங்கோள். (தளவப் பொடிக் கொண்டு) பரிசுத்தமான பொடியைக் கொண்டு. (நீர்) பாபம் பண்ணுகைக்கு ஸஹகரித்தார்க்கு, ப்ராயச்சித்தத்துக்கும் கூட்டுப்பட்ட

வேண்டாவோ? (இட்டிடுமின்) இவள் மேலே இடுங்கோள். தேவதாந்தர ஸ்பர்சமுண்டானதுக்கு பகவந் நாமத்தைச் சொல்லிப் பரிஹரிக்கப் பாருங்கோள்; தேவதாந்தர ஸ்பர்சமுடையாருடைய ஸ்பர்சத்துக்கு, ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பாதரேணுவைக் கொண்டு பரிஹரிக்கப் பாருங்கோள். இப்படி செய்தால் பரிஹாரப்படுமோ? என்ன, (தணியுமே) இவள் கண்ணும் விழித்து, நிறமும் வரும்படி காட்டித் தரக்கடவேன்.

**விளக்கம்** - இதனை கேட்ட தாய்மார்கள் அந்தத் தோழியிடம், "அப்படியானால் இவளுக்கான பரிகாரம் என்ன?", என்று கேட்டனர். இதற்குத் தோழியானவள் உரைக்கத் தொடங்கினாள். நீங்களே, திருவிருத்தம் (37) – நெடுங்காலமும் கண்ணன் நீண்மலர்ப்பாதம் பரவிப் பெற்ற – என்றீர்கள். ஆகவே நீங்கள் கூறியது போன்றே க்ருஷ்ணனின் திருவடிகளை அண்டி நின்று இதற்கான பரிகாரம் செய்து, இவளுடைய நோயை நீக்குவீர்களாக. (கவளம் இத்யாதி) - இங்கு இரண்டு அநிநீகள் நடந்தன. அவற்றுக்கு இரண்டு பரிகாரங்களையும் நீங்கள் செய்வீர்களாக; இதனைப் பின்னர் கூற உள்ளாள். கவளத்தை உட்கொண்டதாக, தகாத த்ரவியங்களை உள்ளே பருகும்படியாகச் செய்து யானையின் புத்தியானது தடுமாறும்படிச் செய்தனர்; பின்னர் மதஜலம் பெருகியபடி உள்ள குவலயாபீடம் என்ற அந்த யானையைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதனை முடித்து உதவி செய்தவன்; அனைத்துவிதமான தடைகளையும் மிகவும் எளிதாக நீக்கவல்லவன்; அவனுடைய திருநாமங்கள் கொண்டு நீங்கள் பரிகாரம் செய்ய முயல்வீர்களாக. (தளவப் பொடிக் கொண்டு) - தூய்மையான பொடியைக் கொண்டு. (நீர்) - பாபம் செய்வதற்கு உதவியாக இருந்தவர்கள், அதற்கான பரிகாரம் செய்யும்போது உடன் இருக்கவேண்டாமோ? (இட்டிடுமின்) - இவள் மீது பூசுங்கள். மற்ற தேவதைகளுடைய ஸம்பந்தம் ஏற்பட்டதால் உண்டான தோஷத்தை, பகவானின் திருநாமம் உச்சரித்து நீக்குவீர்களாக. அந்தத் தேவதைகளுடைய அடியார்களுடன் ஸம்பந்தம் உண்டான காரணத்தால் ஏற்பட்ட தோஷத்தை நீக்க, பகவானின் அடியார்களுடைய பாததூசிகள் கொண்டு பூசுவீர்களாக. இதனைக் கேட்ட தாய்மார்கள, "இவ்விதம் செய்தல் என்பது பரிகாரம் செய்ததாக ஆகுமோ?", என்றனர். இதற்கு விடை அளிக்கிறாள். (தணியுமே) - இவளுடைய கண்கள்

நன்றாகத் திறந்து, இவளுடைய நிறமும் திரும்புவதை நீங்கள் காணும்படியாகச் செய்வேன்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 7)

**வ்யாக்யானம்** - பகவத்ஸ்தோத்ரம் பண்ணப்புக்கவர் ஆசார்ய ஸ்துதியிலே பார்ப்பானென்? என்னில்; "கர்ணே ஸ்ப்ருஷ்டே கடிம் சாலயதி" என்னுமாபோலே அஸங்கதம் என்னில்: பகவத் விஷயத்தைத் தமக்கு ஸ்துதி விஷயமாக்கிக் கொடுத்த உபகார ஸ்ம்ருதியாலும், ஸ்தோத்ரம் பண்ணுகைக்கு அடியான ஜ்ஞான வைசாத்யார்த்தமாகவும், அவிக்ந பரிஸமாப்த்யர்த்தமாகவும் பண்ணுகிறாராகையாலே ஸங்கதம்.

**விளக்கம்** – ஆனால் பகவானைத் துதிக்கத் தொடங்கியவர், ஆசார்யர்களைத் துதிப்பதில் ஏன் முயலவேண்டும் என்று கேட்கலாம். கர்ணே ஸ்ப்ருஷ்டே கடிம் சாலயதி – காதைத் தொட்டால் இடுப்பை அசைக்கிறான் என்று கூறுவது போன்று தகாத செயல் என்றால், பகவத் விஷயத்தைத் தனக்கு ஸ்துதிப்பதற்கான ஒரு விஷயமாக அளித்து உபகாரம் செய்ததை எண்ணுவதாலும், ஸ்தோத்ரம் செய்வதற்கு அடிப்படையாக உள்ள ஞானத் தெளிவை ஏற்படுத்தியதாலும், தடைகள் அனைத்தையும் பரிபூர்ணமாக விலக்கியதாலும் ஆசார்யர்களைத் துதிப்பதால், தகாத செயல் அன்று என்றாகிறது.

**வ்யாக்யானம்** - அதில் மாநஸமாக அமையாதோ? என்னில்: இப்ரபந்தத்தை அதிகரிப்பார்க்கு உபகாரமாகையாலே, வாசிகமாக்கினதும் யுக்தம். உபகார

ஸ்ம்ருதியாலே வந்த ஆசார்யானுவர்த்தனம் ப்ரமாண ப்ரஸித்தம்: "ஆசார்ய தேவோ பவ", "நம ருஷிப்யோ மந்த்ர க்ருத்ப்ய:" , "ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்ட்டம் ஜந்ம", "மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ர ப்ரதே குரௌ". கிஞ்ச, ஒரு ரத்னத்தை ஒருவன் கொடுத்தால், அதினுடைய மஹார்க்கத்தை அறியக் கொடுத்தவனை ஆதரிக்க ப்ரமாணம் வேண்டுமோ? ஆகையால் இது உபபன்னம். ஜ்ஞானவைசாத்யார்த்தமாக ஆசார்யாநுவர்த்தகம் சிஷ்டாசார ப்ராப்தம்: "அபிவந்த்ய குரூநாதௌ சிஷ்யதீபத்மிநீரவீந்" இதி மீமாம்ஸகா:, "யதா கநந் கநித்ரேண" இதி மநு:, "யஸ்ய ப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயணகதாமிமாம்" இதி வைசம்பாயந:, "லௌகிகம் வைதிகம் வாபி" இதி மநு:.

**விளக்கம்** - இதனை மனதளவில் செய்தால் போதுமானது அல்லவோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். இந்த நூலை ஈடுபாட்டுடன் கற்பவர்களுக்கு இப்படியாக உரைத்தல் என்பது உபகாரமாக இருக்கும் என்பதால், சொற்கள் கொண்டு வெளிப்படுத்துதல் சரியானதே ஆகிறது. உபகாரம் செய்த காரணத்தால் ஆசார்யன் குறித்த சிந்தனை ஏற்படுதல் என்பதை ப்ரமாணங்களும் கூறுகின்றன. தைத்திரீயம் - ஆசார்ய தேவோ பவ – ஆசார்யனைத் தெய்வமாகக் கொள்வாயாக, யஜுர் ஆரண்யகம் - நம ருஷிப்யோ மந்த்ர க்ருத்ப்ய: - மந்த்ரத்தை வெளிப்படுத்திய ரிஷிகளுக்கு நமஸ்காரம், ஆபஸ்தம்ப ஸூத்ரம் (1-1-6) - ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்ட்டம் ஜந்ம – சிஷ்யனுக்கு உயர்ந்த பிறப்பை வித்யை மூலமாக ஆசார்யன் அளிக்கிறான், ஸ்ரீவிஷ்ணுதத்வம் - மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ர ப்ரதே குரௌ – மந்த்ரம், அதில் கூறப்படும் தேவதை, அதனை உபதேசம் செய்த ஆசார்யன் - என்பது போன்றவை காணலாம். நிற்க, ஒரு இரத்தினக்கல்லை ஒருவன் மற்றொருவனுக்கு அளித்தால், அந்தக் கல்லின் மேன்மையை அறிவதற்கு, அதனை அளித்தவனை ஆதரித்தல் என்ற செயலுக்கான ப்ரமாணம் தேவையா என்று கேட்கலாம். அவசியம் இல்லை. ஆகவே இங்கு ஆசார்யர்களை துதித்தல் என்பது பொருத்தமே ஆகும். ஞானத்தில் தெளிவை ஏற்படுத்தியதால் ஆசார்யனை எப்போதும் எண்ணுதல் என்பது, சரியான சிஷ்யனுக்கான இலக்கணம் என்பதை மீமாம்ஸகாரிகை - அபிவந்த்ய குரூநாதௌ சிஷ்யதீபத்மிநீரவீந் – சிஷ்யர்களுடைய புத்தி என்னும் தாமரைக்கு ஏற்ற சூரியனாக உள்ள

ஆசார்யர்களை நமஸ்காரம் செய்து – என்று மீமாம்ஸகர்களும், மநுஸ்ம்ருதி (2-218) - யதா கநந் கநித்ரேண – மண்வெட்டியால் எப்படி மண்ணை வெட்டு நீரை அடைகிறானோ - என்று மநுவும், மஹாபாரதம் ஆதிபர்வம் (1-27) - யஸ்ய ப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயணகதாமிமாம் – யாருடைய க்ருபையால் நாராயண கதையை நான் கூறுகிறேனோ - என்று வைசம்பாயநரும், மநுஸ்ம்ருதி (2-117) - லௌகிகம் வைதிகம் வாபி – உலக விஷயம் குறித்து அறிவித்தவரும் – என்று மநுவும் கூறும் வாக்கியங்களில் காணலாம்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்